# *கிறிஸ்தவர்களின் சகாயியான மரியாள்*

ஒருமுறை புனித பிரிஜித்தம்மாள் செபித்துக் கொண்டிருக்கும் போது ஒரு குரல் கேட்டது இயேசு தம் மாசற்ற அன்னையுடன் பேசிக் கொண்டிருந்தார்."அம்மா, உன் பெயரால் என்னிடம் உதவி கேட்கும் அனைவருக்கும் நான் தயவுடன் இரங்குவதாக வாக்களித்திருக்கிறேன்.அவர்கள் பாவிகளாக இருந்தாலும் இரங்குவேன். ஆனால் தங்கள் வாழ்க்கையை சீர்திருத்திக் கொள்ள அவர்களுக்கு நல்ல மனது இருக்க வேண்டும்" என்று இயேசு கூறியது இவளது செவிகளில் விழுந்தது.

1808-ஆம் ஆண்டில் நெப்போலியன், ஏழாம் பத்திநாதர் பாப்பான வரை சிறைப்படுத்தினாள். எனினும் Leipzing என்னும் இடத்தில் நடந்த போருக்குப் பின்னர் பாப்பு விடுதலை அடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது 74.1814-ஆம் ஆண்டு பாப்பானவர் வெற்றியாளராய் உரோமைக்குத் திரும்பினார். 1815-ஆம் ஆண்டில் வாட்டர்லூ என்னும் இடத்தில் நேச நாடுகள் வெற்றியடைந்தன. கடவுளுக்கும் அவருடைய அன்னைக்கும் நன்றியாகவும் நெப்போலியன் கையிலிருந்து விடுதலை பெற்ற வருடாந்திர நாளை நினைவூட்டவும் பாப்பனவர் இந்த விழாவை ஏற்படுத்தினார்.

**சிந்தனை:**

எண்ண முடியாத மக்கள், பாவத்துக்கும், சாத்தானுக்கும் அடிமைகளாக இருக்கிறார்கள். அவர்களை மரியாவின் மாசற்ற இதயத்திடம் ஒப்படைத்தோம்.

**செபம்:**

மரியாயே, மாதாவே, நிர்ப்பாக்கியப்பாவிகள் மேல் இரக்கமாயிரும்.